# 31. நான்காவது முட்டாள்

இளம் பொறியாளர் ஒருவர் கொடுத்த வரைபடத்தைத் துறைத் தலைவரால் புரிந்து கொள்ள முடியவில்லை அதனால் எரிச்சல் அடைந்தார்.

*தலைவர்:* "நீ ஒரு நட்"

*பொறியாளர்:* "இல்லை சார், நான் போல்டாகப் பிறந்தேன்"

தலைவர் சொன்னார்: "முட்டாள்!"

*பொறியாளர்:* "ஐயா, என்னை அவமானப்படுத்தாதீர்கள், நான் முட்டாள் இல்லை, நான்காவது முட்டாள், உங்களைப் போல் பலரால் இரண்டையும் வேறுபடுத்திப் பார்க்க முடியவில்லை."

இந்த நான்காவது முட்டாள் கதை சுவாரஸ்யமானது. அவர் இளமையாக இருந்தபோது, "நீ ஒரு முட்டாள்" என்று குடும்பத்தில் யாரோ சொன்னார்கள், அவர் தமது குடும்பத்தில் முதல் பொறியாளர் ஆனார்.

அவரது மூத்த ஆசிரியர் ஒருவர் முட்டாள் என்று சொன்னபோது, அவர் மிகப்பெரிய மற்றும் மதிப்புமிக்க நிறுவனத்தில் வடிவமைப்புப் பொறியாளர் ஆனார்.

அங்கிருந்த அவரது மேல் அதிகாரிகள் அவரை ஒரு முட்டாள் என்று நினைத்தபோது, அந்த நிறுவனம் அவரை ஒரு புகழ் பெற்ற மேலாண்மைப் பள்ளியில் முனைவர் பட்டப்படிப்பிற்கு அனுப்பியது. மேலாண்மைப் பள்ளி அவருக்கு விருது வழங்கியது. ICSSR அவரது தனித்துவத்தைத் தொடர ஆராய்ச்சி மானியத்தையும் வழங்கியது.

ஒர் ஆசிரியர் அவரை ஒரு முட்டாள் என்று நினைத்தபோது, அவர் நாட்டின் மூன்றாவது பெரிய வங்கியில் அவரை விட அதிகச் சம்பளத்தில் மூத்த பயிற்சியாளராக ஆனார்.

வங்கியிலிருந்த அவரது மேலதிகாரி அவரை முட்டாள் என்று நினைத்தபோது, நிர்வாகம் அவரை ஒரு மேலாண்மை நிறுவனத்தில் அனைத்துச் செலவுகளையும் ஏற்று டெபியுட்டேஷன் அலவன்சும் கொடுத்து அவரைப் பேராசிரியராகப் பணியமர்த்தியது.

பேராசிரியர் ஒரு முட்டாள் என்பதை நிறுவனத்தின் புதிய இயக்குனர் உணர்ந்தபோது, அவர் முதுகலைத் திட்டத்தின் தலைவராகவும், குழுவின் உறுப்பினர் மற்றும் வாரியத்தின் செயலாளராகவும் ஆக்கப்பட்டார். ஐரோப்பிய நிர்வாகத்தைப் புரிந்து கொள்ள அவர் ஐரோப்பாவிற்கும் அனுப்பப்பட்டார். போர்டு முட்டாள்தனத்தை உணர்ந்தபோது, அவர் டீன் (கல்வியாளர்) ஆக்கப்பட்டார்.

மற்றொரு புதிய இயக்குநர் பணியேற்ற உடன் , அவரை ஒரு முட்டாள் என்று உணர்ந்து கற்பித்தலை நிறுத்தும்படி கூறினார்(அது தகுதியற்றவர்களால் செய்யப்பட வேண்டும், ஆனால் அவர் நிபுணர் என்று சான்றளிக்கப் பட்டவர்களால் செய்யப்பட வேண்டும்) மற்றும் ஆராய்ச்சி செய்யச் சொன்னார். அப்போது முதல் அவருக்கு புதிய அத்தியாயம் தொடங்கியது . அவரது ஆராய்ச்சி முடிவுகளின் காரணமாக, உலக வர்த்தக

அமைப்பின் கீழ் இந்தியாவின் கல்வித் துறையைத் திறப்பதற்கான பதிலை உருவாக்கும் பணிக் குழுவின் உறுப்பினராகவும், MHRD-இல் ஆராய்ச்சி முன்மொழிவு மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினராகவும் ஆக்கப்பட்டார்.

ஒரு வேளை MHRD அவர் ஒரு சூப்பர் முட்டாள் என்பதை உணர்ந்து, ஒரு நிர்வாகக் கழகத்தின் இயக்குநராக ஆக்கப்பட்டிருக்கலாம். மேலும் ஆறு புதிய மேலாண்மை நிறுவனங்களுக்கான டிபிஆர் தயாரிப்பதற்கு உதவுமாறு அவர் கேட்டுக் கொள்ளப்பட்டார். போதாக்குறைக்கு அவரை கௌரவப்படுத்தும் விதத்தில் AICTE அவரை அவ்வப்போது ஒப்புதல்கள் / ஆராய்ச்சி / அங்கீகாரக் குழுக்களின் தலைவராக்கியது.

அவர் ஓய்வு பெற்றதும், ஊதிய மாற்றம் நடந்தது. இயக்குநர் ஒரு குழுவை நியமித்தார், இது இரண்டு வருடக் கடுமையான ஆய்வுக்குப் பிறகு, அவர் ஒரு அசாதாரண முட்டாள் என்றும், சாதாரணப் பேராசிரியர்களுக்குப் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட HAG அளவுகோலுக்கு அவர் தகுதி பெறவில்லை என்றும் முடிவு செய்தனர். இந்த நோக்கத்திற்காக அரசாங்க வழிகாட்டுதல்களைத் தவிர்ப்பதற்கான வழிகளையும் குழு பரிந்துரைத்தது, அதை வாரியம் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டது. அவரது முட்டாள்தனத்தின் அளவைக் கண்டு கவரப்பட்ட ஒரு மூத்த குழு உறுப்பினர் அவருக்கு இரண்டு ஆண்டுகளுக்கு பெல்லோஷிப்பை வழங்கினார், ஏனெனில் அவர் சிறந்த அறிஞர்/ புகழ்பெற்ற கல்வியாளர் என்ற அளவுகோலில் தகுதி பெற்றார். பரிந்துரைகளை ஏற்கும் போது, ஆசிரிய மேம்பாட்டுத் திட்டத்தை தயாரிக்கும்படியும் வாரியம் கேட்டுக் கொண்டது. அவரின் செயல்திறனால் ஈர்க்கப்பட்ட வாரியம் அவரைத் தேசிய மேலாண்மை ஆசிரியர் மேம்பாட்டு மையத்தை உருவாக்குவதற்கான வாரியத் துணைக் குழுவில் இணைத்தது.

அவர் வயதாகி, நோய்வாய்ப்பட்டு அடிக்கடி மருத்துவமனையிலும் / படுக்கையிலும், வீட்டிலும் அடைக்கப்பட்டார். விரக்தியடைந்த அவர், ஐஐஎம்-கள் சட்டத்தை வெளியிடும் அதே வேளையில், 7(ஜி) பிரிவை அறிமுகப்படுத்தி, அரசாங்கம் விரும்பியபடி ஐடியைப் பயன்படுத்தி உலகளாவிய பயன்பாட்டிற்காக, எந்த அலுவலக உதவியும் அல்லது நிதி உதவியும் இல்லாமல், ஒரே ஆண்டில் ஆறு பூஜ்ஜிய விலைப் புத்தகங்களை உருவாக்கினார். தற்செயலாக, அவர் அதை அரசாங்கத்திற்குத் தெரிவித்தார். விநோதமாகப் பிந்தையவர், ஓய்வூதியத்தைத் திருத்தக் கூடாது என்று ஆசிரியர் சுற்றறிக்கையின் ஊதியத் திருத்தத்தில் தெளிவுபடுத்தினார். பின்னர், அவர் தனது 12 புத்தகங்களின் நகல்களை அனுப்பியபோது, ஆறு நாள்களுக்குள் ஓய்வூதியத் திருத்தம் குறித்த முடிவு அறிவிக்கப்பட்டு, அடுத்த எட்டு நாள்களுக்குள் தேவையான அறிவிப்பு வெளியிடப்பட்டது. "ஒருவருக்கு இன்னும் என்ன வேண்டும்?" என்று நிருபரிடம் கேட்டார்.

முட்டாளாக இருப்பதில் வெட்கப்படுகிறீர்களா? என்று நிருபர் ஒருவர் கேட்டதற்கு, “நான் ஏன் வெட்கப்பட வேண்டும்? பல முட்டாள் அல்லாதவர்கள் ஏங்கும் வளர்ச்சியை நான் வாழ்க்கையில் பெற்று இருக்கிறேன். மாறாக நான் அதில் பெருமைப்படுகிறேன். நான் ஒரு முட்டாளாக இல்லையெனின், மக்கள் என்னிடம் இந்தப் பொறுப்புகளை ஒப்படைத்திருக்க மாட்டார்கள். நான் வாழும் சமுதாயத்திற்கு எந்தத் தீங்கும் செய்யவில்லை, முட்டாள்கள் அல்லாதவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பாருங்கள். ஒரு முட்டாள் எட்டு வயதுக் குழந்தையைப் பாலியல் பலாத்காரம் செய்வதையும், குற்றம் சாட்டப்பட்டவரைப் பாதுகாக்கும் சில முட்டாள்களையும் பார்த்தீர்களா? ஒரு முட்டாள் வங்கியை ஏமாற்றுவதையோ அல்லது தீ வைப்புச் செயலில் ஈடுபடுவதையோ நீங்கள் எப்போதாவது பார்த்திருக்கிறீர்களா? மதம், ஜாதி போன்றவற்றை நம்மால் புரிந்து

கொள்ள முடிவதில்லை, நமது சுயநலத்தைக் கணக்கிடுவதற்கு நமது மூளை வளர்ச்சியடையாததால், நாம் பெரும்பாலும் நம் இதயத்தின் மூலம் செயல்படுகிறோம், அதை முட்டாள்கள் அல்லாதவர்கள் புரிந்து கொள்ள முடியாது, அதனால் முட்டாள் என்று அழைக்கிறார்கள்.

கடைசிக் கேள்வி, நிருபர் "இப்போது உங்களுக்கு 71+ வயதாகிவிட்டாலும் எதிர்காலத் திட்டம் ஏதேனும் உள்ளதா?" எனக் கேட்டார்.

“இளம் முட்டாள்- அல்லாத பையனே பார்! முட்டாள்கள் சிந்தித்து வேலை செய்வதை நிறுத்துவதில்லை. மூத்த குடிமக்களின் துயரங்கள் குறித்து நான் கவலைப்படுகிறேன். படுக்கையில் இருக்கும் மூத்த குடிமக்களின் பொழுதுபோக்கிற்காக "இந்திர-தனுஷ்" மற்றும் "இசை" ஆய்வுக் கட்டுரைகளை உருவாக்கினேன். நான் தற்போது இரண்டு முக்கிய திட்டங்களில் பணியாற்றி வருகிறேன். ஒரு வடிவமைப்புக் கல்லறையை உருவாக்கி இருக்கிறேன்.அங்கு மக்கள் உலகிற்கு பை-பை சொல்லும்போது பணத்தை எடுத்துச் செல்ல முடியும். பவர் ஆ∴ப் அட்டர்னி வழியைப் பயன்படுத்த வேண்டுமானால், வடிவமைப்பு, கிட்டத்தட்டத் தயாராக உள்ளது. மற்ற இடங்களிலும் கல்லறை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் நாணயம் மற்றும் விசா சிக்கல்கள் உள்ளன என்பது உங்களுக்குத் தெரியும் பெரும்பாலான மக்கள் செல்ல விரும்பும் இடத்தில் அதிகாரிகள் இந்த நாணயத்தை ஏற்றுக் கொள்வதில்லை. அவர்களின் விசா நிபந்தனைகளும் மிகவும் கண்டிப்பானவை. அதனால் பலருக்கு அது கிடைக்கவில்லை அதிகாரிகள் எங்களின் கரன்சியை ஏற்றுக் கொள்வதற்கும் எளிதாக விசா வழங்குவதற்கும் தயாராக இருக்கும் இடங்களுக்கு மக்கள் செல்ல விரும்புவதில்லை.

இரண்டாவது ப்ராஜெக்ட் நான் ஒரு தானியங்கிப் புதைப்பு மற்றும் தகனம் செய்யும் முறையை உருவாக்க முயன்று வருகிறேன். பலர் தயாரிப்பைக் கோருகிறார்கள். ”

"வாழ்த்துகள் சார், நம்மில் பலருக்கும் இது தேவைப்படும்", என்றார் நிருபர்.